[12th September 1959

பிரச்னைகளினால் இது துவக்கப்படாமல் தாமதப்படுகிறதா? அல்லது வேறு விஷயங்களினால் இதில் ஒரு முடிவு எடுக்கத் தாமதம் ஏற்படுகிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : கிழக்கு ஜெர்மனியிலிருந்து அவர்களுடைய உதவியைக்கொண்டு இதை வைப்பதாக முதலிலே யோசனை இருந்தது. இப்பொழுது அது சாத்தியம் இல்லை என்று தெரிகிறது. ஆகவே, வேறு நாட்டிலிருந்து இதை வைப்பதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

SRI P. G. MANICKAM : சினிமா தொழிலுக்காக கச்சா பிலிம் அதிகம் தேவை என அனேகம் தடவை சினிமா சம்பந்தப்பட்ட அஸோஸியேஷன் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கின்றது. ஆனால், இந்தத் தொழிற்சாலை ஏற்படுத்துவது கடந்த இரண்டு வருஷங்களாக தாமதப்பட்டுக்கொண்டு வருகிறது. ஆகையால், கூடிய சீக்கிரம் ஏற்படுத்துவதுபற்றி மத்திய சர்க்காருக்கு நமது சர்க்கார் கடிதப் போக்குவரத்து நடத்திற்று என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதெல்லாம் நுட்பமான இயந்திரங்கள். நாம் எவ்வளவு அவசரமாக வைக்கவேண்டுமென்று விரும்புகிறோமோ அவ்வளவு அவசரமாகக் கிடைப்பதில்லை. கிடைக்கும்போதுதான் வைக்க முடியும்.

SRI A. VEDARATHNAM : கிழக்கு ஜெர்மனியோடு சேர்ந்து இந்த பிலிம் உற்பத்தி செய்யலாம் என்று நாம் ஏற்படுத்த முடியாது போனாலும், மேற்கு ஜெர்மனியிலிருந்து 'ஆபர்' நம்முடைய சர்க்காருக்கு வந்ததே, அவர்கள் உதவியைக்கொண்டு இந்த பிலிம் தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்தில் ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : மேற்கு ஜெர்மனியிலிருந்து பிலிம் பாக்டரி வைப்பதற்காக எந்தவிதமான ஒரு ஆலோசனையும் வரவில்லை.

SRI N. MARUDACHALAM : அந்தத் தொழிற்சாலையை நீலகிரியில் வைக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். எந்த தேசம் நம்மோடு செய்வதற்கு ஒத்துழைக்க முன்வருகிறார்களோ அவர்கள் இடத்தையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து, அவர்கள் எந்த இடத்தில் வைத்தால் சரி என்று சொல்லுகிறார்களோ அங்கு வைக்கப்படும்.

Industrial Dispute (Madras Amendment) Act, 1949.

* 363 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to re-enact the Industrial Dispute (Madras Amendment) Act, 1949 in accordance with assurance given by the Minister at the last Standing Labour Committee meeting?

12th September 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have examined the question and consider that there is no need to re-enact the Industrial Disputes (Madras Amendment) Act, 1949.

Industrial potentialities of the State

* 364 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Industries be pleased to place on the Table of the House a copy of the Interim Report received from the National Research Council of Applied Economics regarding the Industrial potentialities of the State?

THE HON. SRI R. VENKATARAMAN : The Preliminary draft of the report of the National Council of Applied Economic Research contains certain tentative suggestions for setting up new industries and for expanding certain existing industries. The report is being finalised by the Council. It will not be in the public interest to disclose the contents of the Preliminary draft at this stage.

Women Beedi Workers

* 365 *Q.*—SRI D. S. AUTHIMOOLAM. (on behalf of Srimathi T. N. ANANDANAYAKI) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have received petitions recently from the Women Beedi Workers, requesting the Government to exempt the rolling of the beedies by women from the operation of the Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958?

THE HON. SRI R. VENKATARAMAN : The answer is in the affirmative.

SRI D. S. AUTHIMOOLAM : பெண் தொழிலாளிகளுக்கு விதிவிலக்கு கொடுப்பது பற்றி சென்ற இரண்டு மாதங்களுககு முன்பு நடந்த மகாநாட்டில் மந்திரி அவர்கள் ஏதாவது வாக்குறுதி அளித்தார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : பெண் தொழிலாளர்கள் இலை நனைப்பது, வெட்டுவது ஆகிய இரண்டு காரியங்களையும் அவர்கள் வீட்டிலேயே செய்யலாம் என்று சர்க்கார் கூறியது. அதுமாத்திரமல்ல, அவ்வாறு அவர்கள் வீட்டில் செய்தால் அவர்களுக்கு பாக்டரி சட்டம் அமுலாகாது. அவர்களுக்கு இந்த பீடி இண்டஸ்ட்ரியல் ப்ரெமிஸஸ் சட்டத்திலேயுள்ள சலுகைகளைக் கொடுக்க அவசியம் இல்லை என்று தெளிவுபடுத்தினார்கள்.

Local Development Works in Tiruchirappalli District.

* 366 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Works be pleased to state :

(*a*) whether the staff allotted to Tiruchirappalli district for the works under the Local Development scheme have been allowed to continue only up to June 1959;